தமிழா இணைவோம்!! தமிழால் இணைவோம்!!

# WITS

# செய்தி மடல்

# தமிழ் ஊற்று





# WITS
# செய்தி மடல்
# தமிழ் ஊற்று

***அன்புடையீர் வணக்கம்,***

**வாழிய செந்தமிழ்! வாழ்கநற்றமிழர்! வாழிய பாரத மணித்திரு நாடு!**

இருபது ஆண்டுகற்கு முன்னதாய் ஒரு சில ஒற்றைக்குடும்பங்கள் குடிபெயர்ந்து இந்த அயலவர் மண்ணில் தமிழென்னும் மொழியை ஒலிக்கச்செய்தனர்.அந்த தமிழென்னும் அமிர்தத்தின் ருசியுணர்ந்த பெருமக்கள் தம் வழி தொடரும் மக்கற்கும் அம்மக்கள் பெறும் மக்கற்கும் நம்மொழி கொண்டு சேர்க்கும் வழி தேடி விழைந்தனர்.

அந்த அற்புதத்தேடலுக்கு கிடைத்த அரும்பரிசே நமது விஸ்கான்சின் தமிழ்ச்சங்கம்!!

2002-இல் துவங்கி இன்று தன் இருபதாம் ஆண்டில் வெற்றித்தடம் பதிக்கிறது நமது விஸ்கான்சின் தமிழ்ச்சங்கம்!!

5-இல் துவங்கி இன்று பல்லாயிரம் தமிழ்க்குடும்பங்களை இணைத்திருக்கிறது நமது விஸ்கான்சின் தமிழ்ச்சங்கம்!!

மற்றுமொரு புதுமுயற்சியாய் நம் செய்திமடல் "தமிழ் ஊற்று" மின் அஞ்சலில் விரைந்து உங்கள் இல்லம் தேடி வருகிறது என்பதை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறது நமது விஸ்கான்சின் தமிழ்ச்சங்கம்

பருவ நிலை தவறினாலும் பருவந்தோரும் நமது "தமிழ் ஊற்று" தவறாமல் உங்களைத் தேடி வரும் என்பதில் மட்டற்ற மிகிழ்ச்சி கொள்கிறது நமது விஸ்கான்சின் தமிழ்ச்சங்கம்.

INDIA HOUSE
FOODS • SPICES • GIFTS
709, S. GAMMON ROAD OPEN 7 DAYS A WEEK
MADISON, WI 53719 PH:608-268-0240/608-843-4903

Thiru Dr. Periannan Senapathy & Thirumathi Roopa Senapathy
Thiru Dr. Jalaiah Unnam & Thirumathi Vijaya Unnam
Thiru Dr. S. Balachandran & Thirumathi Lalitha Balachandran

GO4GURU

தமிழா இணைவோம்!! தமிழால் இணைவோம்!!

# WITS செய்தி மடல்

# தமிழ் ஊற்று

## நமது புதிய செயற்குழு

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்,
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்,
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்,
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்.

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கி இவ்வையம் தழைக்குமாம்.

பாரதி கண்ட புதுமைப்பெண்ணாய் அவர்
கண்ட கனவினை அரங்கேற்ற வருகிறது.

பெரும் சாதனைகளை சரித்திரமாக்க
தமிழ்ச்சங்கு முழங்கி வருகிறது.

உலகமெல்லாம் ஓங்கி நிற்கும் தமிழ்ச்சங்க
வரலாற்றிலே மாதவம் செய்த மங்கையராய்
முதல் தடம் பதித்திட இணைகிறது விஸ்காசின்
தமிழ்ச்சங்க மகளீர் செயற்குழு.

அடுப்பங்கறை துவங்கி அலுவலகம் சென்று
இன்று அவையாள வருகிறது.
விஞ்ஞானமோ, விவசாயமோ,
மனித வளமோ, கணினிக்களமோ,
கட்டியகுடும்பமோ, பற்றிய பணியிடமோ,
தொட்டதெல்லாம் பொன்னாக்கிய
எம்மாதர் கூட்டம் இங்கே
கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே
முன்தோன்றிய எம் தமிழ்க்குடியின்
கலாச்சாரத்தையும் பாரம்பரியத்தையும்
எம் அடுத்த தலைமுறைக்கு உரித்தாக்கும்
பொருட்டு விஸ்கான்சின் தமிழ்ச்சங்கத்தலைமைக்
குழுவிற்கு தோள் கொடுக்க வருகிறது நமது
புதிய செயற்குழு.



ஆலோசனையாளர்
**ராஜி வெங்கடேசன்**



சமூக தொடர்பாளர்
**உஷா ஷங்கர்**



தலைவர்
**பவானி தினகரன்**



துணை தலைவர்
**ஜான்சிராணி பிரபாகரன்**



பொருளாளர்
**நிரஞ்சனி ஐயர்**



துணை பொருளாளர்
**ஷோபா அனந்தநாராயணன்**



செயலாளர்
**காயத்ரி குரு**



துணை செயலாளர்
**ரேகா ராஜ்குமார்**

தமிழா இணைவோம்!! தமிழால் இணைவோம்!!

# WITS செய்தி மடல்

# தமிழ் ஊற்று

# பொங்கல் விழா




ISR Info Way

MATHNASIUM The Math Learning Center

# விஸ்கான்சின் தமிழ்ச்சங்கத்தின் வரலாறு

தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா அனைவருக்கும் வணக்கம் எனது பெயர் சக்திவேல் பிரபாகரன் , விஸ்கான்சின் தமிழ் சங்கத்தின் நிறுவனர் என்ற முறையில் விஸ்கான்சின் தமிழ்ச் சங்கம் உருவாவதற்கு அடித்தளம் அமைத்து கொடுத்த பெருமை எனக்கு உண்டு என்று சொல்லிக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நான் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் நுண்ணுயிரியல் துறையில் முதுநிலை மற்றும் முனைவர் பட்டம் பெற்று 1993-ம் ஆண்டு விஸ்கான்சின் மாநிலத்தின் தலைநகர் மாடிசனுக்கு குடியேறினேன்.

அங்கு மேல்நிலை ஆராய்ச்சிக்காக விஸ்கான்சின் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானியாக பணிபுரிந்தேன். தற்போது மாடிசன் நகரில் இந்தியா ஹவுஸ் என்ற பெயரில் இந்திய பல்பொருள் அங்காடி ஒன்றை நடத்தி வருகிறேன்.

அன்றைய 90 காலகட்டத்தில் தமிழின மக்களை பார்ப்பதும், வெளியிடங்களில் தமிழ் மொழியில் உரையாடுவதும் மிகவும் அரிது, 10 ஆண்டுகள் கடந்தது,நான் முதலில் நம் தமிழின மக்களை ஒருங்கிணைப்பது எப்படி என்று சிந்தித்து, மேடிசன் நகரில் தமிழ்ச் சங்கம் ஒன்று ஆரம்பிக்கலாம் என்ற சிந்தனை என் மனதில் எழுந்து அந்த சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுக்கும் நோக்கில் நண்பர்கள் சிலரை என் வீட்டுக்கு அழைத்து என் விருப்பத்தை தெரிவித்தேன், அனைவரும் அதை வரவேற்றனர். நண்பர்கள் ஆதரவோடு, 2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ம் நாள் விஸ்கான்சின் தமிழ்ச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. சிறப்பு விருந்தினராக, வட அமெரிக்க தமிழ்ச்சங்க பேரவையின் உறுப்பினரான திரு Dr.இளங்கோவன் ஐயா கலந்து கொண்டார்.முதல் தலைவராக திரு மகேந்திரன் அவர்கள் பொறுப்பு வகித்தார.

நம் விஸ்கான்சின் தமிழ்ச் சங்கம் ஆனது தமிழ் மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்காகவும், தமிழ் பாரம்பரியம் மற்றும் நம் கலாச்சாரத்தை எமது அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்வதற்காகவும் , தமிழ் மக்கள் ஒருங்கிணைந்து செயல்படவும், நம் குழந்தைகள் மற்றும் இளம் தலைமுறையினர் தமிழ் பேச கற்றுக்கொள்ளவும் ஆரம்பிக்கப்பட்டது.

2010ஆம் ஆண்டு முதல் நாள் விஸ்கான்சின் தமிழ்ச் சங்கம் வட அமெரிக்கா தமிழ்ச் சங்க பேரவையுடன் இணைந்தது. நம் தமிழ்ச் சங்கம் தொடங்கப்பட்ட நாள்முதல் பதவி வகித்த அனைத்து செயற்குழு உறுப்பினர்களுக்கும், தன்னார்வத் தொண்டர்களுக்கும், பேராதரவு நல்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் , மற்றும் இந்த வருடம் பதவி ஏற்றிருக்கும் மகளிர் மட்டும் செயற்குழு உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

வாழ்க தமிழ்!

**சக்திவேல் பிரபாகரன்**

தமிழா இணைவோம்!! தமிழால் இணைவோம்!!

# WITS
# செய்தி மடல்
# தமிழ் ஊற்று

## ஆண்டவர்களின் அரசன்-ராஜராஜன்



தமிழ் நாட்டை எத்தனையோ அரசர்கள் ஆண்ட போதிலும் ஏன் ராஜராஜனை மட்டும் நாம் கொண்டாட வேண்டும் என்பதற்க்கு பல எடுத்துகாட்டுகள் உள்ளன.

ஒரு காட்டில் விலங்கு மற்ற உயிரினங்களை கணக்கிட வேண்டும் என்றால் மற்ற உயிரினங்களை எண்ண வேண்டும் என்பதல்ல, புலிகளின் எண்ணிக்கையைக் கொண்டு, அப்புலிகள் வாழும் காட்டிலுள்ள மற்ற விலங்கினங்களையும் அக்காட்டின் வளங்களையும் கணக்கிட இயலும்.

காட்டில் சிங்கம் புலி இரண்டுமே சம பலத்தினை கொண்டவை என்றாலும், ஏன் சிங்கத்தையே காட்டின் அரசன் என்று கூறுகிறோம்? சிங்கம் தன் பசிக்கு மட்டுமே வேட்டையாடும் பசி இல்லாத பொழுது ஓர் இளம் மான் குட்டியே அதன் முன் வந்தாலும், அதனை சிங்கம் கொல்வதில்லை, அதனிடம் வலிமையும், இரக்க குணமும் இருப்பதால் அதனை காட்டின் அரசன் என்று நாம் எடுத்துக்கொள்கிறோம்.

தொடரும்.....

Vennsys LLC
Virtual Solutions To Your Software Needs

Amber
INDIAN CUISINE

# சமைக்கலாம் வாங்க

## பாரம்பரிய சமையல்



### புடலங்காய் பொறிச்ச குழம்பு:

**தேவையான பொருட்கள்:**

புடலங்காய் – 1/2 கிலோ
துவரம் பருப்பு – அரைகப்
பயத்தம் பருப்பு – அரைகப்
மஞ்சள் பொடி – ஒரு சிட்டிகை
கருவேப்பிலை – சிறிதளவு

**வறுத்து அரைக்க வேண்டியவை:**

உளுத்தம் பருப்பு – 1 மேஜை கரண்டி
மிளகாய் வற்றல் – 3 அல்லது 4
மிளகு – 1/2 டீஸ்பூன்
சீரகம் – 1/2 டீஸ்பூன்
தேங்காய் – 1/4 கப்

**தாளிக்க வேண்டிய பொருட்கள்:**

தேங்காய் எண்ணெய் – 1 மேஜை கரண்டி
கடுகு – 1/2 டீஸ்பூன்
உளுத்தம் பருப்பு – 1/2 டீஸ்பூன்
கருவேப்பிலை – சிறிதளவு
பெருங்காயம் – 1 டீஸ்பூன்

### செய்முறை :

குக்கரில் துவரம் பருப்பு, பயத்தம் பருப்பு இரண்டையும் சிறிது மஞ்சள் பொடி சேர்த்து மூன்று அல்லது நான்கு விசில் வரை வேகவைக்கவும். பிறகு அதை நன்றாக பிசைந்து கொள்ளவும். புடலங்காய் பொடியாக நறுக்கி கொள்ளவும், ஒரு பாத்திரத்தில் நறுக்கிய புடலங்காய் சேர்த்து தண்ணீர் ஊற்றி சிட்டிகை மஞ்சள் பொடி சேர்த்து வேகவைக்கவும். மற்றொரு வானலில் ஒரு ஸ்பூன் எண்ணெய் ஊற்றி கொஞ்சம் உளுத்தம் பருப்பு, மிளகாய் வற்றல், மிளகு, சீரகம் போட்டு மிதமான தீயில் சிவக்க வறுத்து அதனுடன் தேங்காய் சேர்த்து ஆறியவுடன் மிக்ஸியில் சிறிது தண்ணீர் சேர்த்து அரைத்து கொள்ளவும். அரைத்த விழுதை வெந்த புடலங்காயுடன் சேர்த்து நன்றாக கொதிக்க விடவும். கொதி வந்ததும் சிறிது உப்பு சேர்த்து வேகவைத்த பருப்பை போட்டு வாசனை வந்தவுடன் கருவேப்பிலை சேர்த்து இறக்கி விடவும். ஒரு வானலியில் தேங்காய் எண்ணெய் ஊற்றி கடுகு, கறுவேப்பிலை, சீரகம், உளுத்தம் பருப்பு, பெருங்காயம் ஆகியவற்றை தாளித்து பொறிச்ச குழம்புடன் சேர்க்கவும். கமகம புடலங்காய் குழம்பு தயார்.

**குறிப்பு:**

இந்த குழம்பு நாட்டு காய்கறி கலவை சேர்த்து செய்யலாம். (சௌசௌ, அவரைக்காய், பூசணிக்காய், பரங்கிக்காய்).


தமிழா இணைவோம்!! தமிழால் இணைவோம்!!

# WITS செய்தி மடல்

# தமிழ் ஊற்று

## வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு!!!

தமிழுக்கும் தமிழகத்திற்க்கும் வான் புகழ் சேர்க்கும் திருக்குறளையும், அந்த அற்புதப்படைப்பினை அருளிய முதற்பாவலர் வள்ளுவரின் பெருமையினை உலகம் தோரும் பாராட்ட விஜிபி உலக தமிழ்ச்சங்கம் வடஅமெரிக்கா தமிழ்ச்சங்க பேரவை (FETNA) வாயிலாக வள்ளுவர் சிலைகளை அமெரிக்க மண்ணில் நிறுவ 60 சிலைகளை ஒப்படைத்துள்ளது.



அவற்றை அமெரிக்க வாழ் தமிழ் அன்பர்களை ஒன்றினைக்கும் அனைத்து தமிழ் சங்கங்களுக்கும் கொண்டு சேர்க்கும் பணியினை (FETNA) மேற்கொண்டுள்ளது. அவற்றுள் ஒன்றை நம் விஸ்கான்சின் தமிழ்ச்சங்கத்திற்க்கு கொண்டு சேர்த்த (FETNA)-விற்க்கும், நமது விஸ்கான்சின் தமிழ்ச்சங்கத்தின் நிறுவனர், முன்னாள் தலைவர் திரு.பிரபாகரன் ஜான்சிராணி தம்பதியரின் புதல்வர் Dr.பிரசாந்த் அவர்களுக்கும் நமது நன்றிகளை உரித்தாக்குவோம்.

# WITS

## புதிய செயல்பாடுகள்

## கரம் கொடுப்போம்



## WITS weaving clinic

"தறி" யினை உயிராக்கி
"பாவு" உடம்பாக்கி
"நூல்" நரம்பாக்கி
"நெசவு" உறவாக
கொண்டு வாழும் தமிழ்நாட்டு கைத்தறி
நெசவாளர்களுக்கு தோள் கொடுத்து உதவும்.

## Adopt a Village

கிராமங்களே நாட்டின் முதுகெலும்பு
கிராம மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு
உதவும் வகையில் அந்த கிராமத்தை நாம்
தத்தெடுத்து அந்த மக்களுக்கு நம்மால்
முயன்ற உதவிகளை செய்து கொடுக்கும் முயற்சி.

## Closet Drive

மறுசுழற்சி (Recycle) பலரது வாழ்வில் பங்கு வகிக்கிறது. நம் தமிழ்ச்சங்க குடும்பங்களில் இருந்து அவர்களுக்கு தேவை அற்ற உபயோகபடுத்த கூடிய துணி மற்றும் புத்தகம், சமையல் பாத்திரம் முதலியவற்றை சேகரித்து கிராமங்களுக்கு அனுப்பும் முயற்சி.

## (PVSA) President's Volunteer Service Award

**அமெரிக்க குடியரசு தலைவரின் தன்னார்வலர் சேவை விருது**

நாம் நம் சமூகத்திற்க்கு வழங்கும் பெரிய பரிசு நம் நேரம். சமூகத்திற்கு volunteering செய்வதன் மூலம் நம் வாழ்விலும் நல்ல மாற்றுதலை உண்டாக்குவோம் சமூகத் தொண்டாற்றும். அனைவருக்கும் கிடைக்கும் அங்கிகராம் தான் இந்த PVSA விருது

# இது உங்கள் பக்கம்

## ஆண்டவா, நீ வடிக்கும் அம்மா ஒரு கவிதை!

கண்கள் இன்றிக் கருவறையில் இரசித்தோம்,
காற்றில்லாமல் அவ்வறையில் சுவாசித்தோம்,
உள்ளே வார்த்தையின்றி மெல்லப் பேசினோம்,
பல்லில்லாது வாய் விட்டுச் அங்கு சிரித்தோம்!

பெற்றோர்கள் சேர்த்து வைத்த அவ் வங்கியில்,
அம்மாவின் கல்லறை என்றதோர் இல்லத்தில்,
ஆண்டவன் அனுப்பி வைத்த அவள் உதிரத்தில்,
கவலையில்லாமல் சில நாட்கள் வாழ்ந்தோம்!

கருவறையில் இருந்து கருத்துடன் பாதுகாத்து,
இரவு பகலாக இமைப் பொழுதும் தூங்காது,
பிரசவத்தின் வலியினை வாழ்த்தி வரவேற்று,
பெற்றெடுத்து வாழ்வு தரும் மாதரசியே தாய்!

விலையில்லா அன்பும் குறைவில்லாப் பண்பும்,
நலம் பேணும் நல்லுறவாய் வாழுமெங்கள் உறவு,
நிகரில்லா அன்பாலே நெஞ்சில் நிறைந்த பதிவு,
மனமெங்கும் வாழும் ஆண்டவனே நம் தாய்,

கருணை உள்ளம் கொண்டவள் மிகவும் நல்லவள்,
கடவுளைப் போல் காப்பவள் எம்மை அணைப்பவள்,
அருமை பொங்க என்றும் அகம் மகிழ வைப்பவள்,
ஆண்டவன் படைப்பினில் அம்மா, நீயொரு அற்புதம்!

அடிமுடி தேடினாலும் எந்த அகராதி புரட்டினாலும்,
கீழடி தோண்டினாலும் சங்கநூல்கள் படித்தாலும்,
அம்மாவின் அன்பிற்கு அகிலத்தில் இணையுண்டா?
அவள் மடியினில் படுக்கின்ற சுகத்திற்கும் ஈடுண்டா?

அம்மாவின் கைப்பட்ட சமையல் வாசம் கமகமக்கும்,
பல நாட்கள் மணத்து மூக்கைத் துளைத் தெடுக்கும்,
சும்மா படுத்திருந்தாலும் அவள் நெஞ்சு பதைபதைக்கும்,
சுகமில்லையா? என்றவள் கை தொட்டு நலம் பார்க்கும்!

அறுசுவை இல்லாத உணவும் நல்லமுதாகும்,
அம்மாவின் கை தொட்டுத் தீர்த்தும் போதினில்,
முந்தானைச் சேலையில் முடிஞ்சு தரும் இனிப்பும்
சிந்தாத அன்போடு சிந்தையில் என்றும் சிந்து பாடும்!

# WITS செய்தி மடல்

# தமிழ் ஊற்று

## இது உங்கள் பக்கம்

### தொடர்ச்சி....

தொட்டதால் துலங்கும் இல்லம், அவள் கைபட்டு,
தொடாமலே நீக்குவாள் நம்நோய், அவள் வழிபட்டு,
கண்டிப்பு நிறைந்திருக்கும், அவள் சொல் தொட்டு,
கண்பட்டு விடுமாம் போடுவாளே கரும் பொட்டு!

வரவேற்கும் பண்புக்கு முன்னோடி அம்மாதான்,
விருந்தோம்பல் சிறப்புக்கு உதாரணமும் அவளேதான்,
அருளோடு தெய்வீகம் இருப்பது தாய் மனதில்தான்,
ஆண்டவனின் பிரதி நிதியாய் இருப்பதும் அம்மாதான்!

கடவுளின் படைப்பினில் அம்மா பெரும் புதுமை,
அவள் செய்யும் தியாகமோ என்னாளும் அருமை,
படைத்தவனும் அடைவான் தாயினால் பெருமை,
வாழ்க்கையில் பொங்கியே வழிந்திடும் இனிமை!

அம்மாவின் அன்பிற்கு என்று மில்லை வறுமை,
ஆண்டவா, போற்றி வணங்குவோ முன் கருணை,
மானுடம் மிளிர்ந்திட படைக்கும் உந்தன் திறமை,
எமக்கென்று நீ படைக்கின்ற அம்மா ஒரு கவிதை!

- சிகாகோ பாஸ்கர்

### என் கைகளிலே! என் கனவுலகு!!

முவ்வாறு ஈரு
முத்தெடுக்கும் பேறு ..
முந்தியிலே முடிக்காமல்
கண் இமைத்திடவும்
கவனம் கொண்டாள் ..

அவள் கண்நோக்கி
யாம் கொண்ட காதல் பரிசை
அவள் கருவாக சுமந்திட்டாள்
நான் கனவாக வளர்த்திட்டேன்..

அவள் ஆழமான அழுகை தன்னில்
அழகாய் பிறந்திடுவாள்..
பிறை நிலவாய் முகம் மலர்ந்திடுவாள்..

தெய்வமெனப் போற்றிவிடும்
செவிலியரின் கரங்களிலே
மரகதப்பூ போர்த்திவருவாள்
எனது மூன்றாம் மஹாராணி ..
நெற்றி முகர்ந்து முத்தமிடுவேன்
என் கைகளுக்குள்ளே
நான் காணும் கனவுகளின் நாயகி..
இவள் எனது கதையின் நாயகி..

# இது உங்கள் பக்கம்

*தொடர்ச்சி....*

மாலையிலே விடையும்
குருவிகளின் கீச்சொலியாய்
இவள் மழலை மொழி..
ஆழியிலே அலை ஆர்ப்பரிக்கும் அமுத மொழி ..

முயலும் நின்று இரசித்திடுமாம்
கொஞ்சும் சலங்கையுடன்
இவள் முதல் எட்டுக்களை..
ஆயிரம் வானவில்லை குழைத்தெடுத்து
வரமகளும் வரைந்திடுவாள்
இவள் போன்றே ஓர் அழகோவியம்..

மானாட மயிலாட
என் மரகத வீணை இவள் விழியாட
கால்களோடு கைகளிலும் சிலம்பாடுவாள்..
வரும் யுகத்தின் பாரதியாய் புதுக்கவி பாடுவாள் ..

அறம் காக்கும் ஆளுமை கொள்வாள்..
தீதுகண்டால் சுட்டெரித்திடும் வீறுகொள்வாள் ..
வீடாளுவாள் .. என் நாடாளுவாள் ..
தன் புன்னகையால் இப்புவியாளுவாள்..

இவள் உயர நான் உயிர் கொள்வேன் ..
இவள் கனவே என் உலகாய் உருமாற்றிடுவேன்..
நான் கொண்ட வாழ்வின் வரமாய்
வளர்த்திடுவேன் என் தாயை!!

- அப்பா

— காயத்ரி குரு

# தமிழ் ஊற்று

## புத்தகம் ( சிறகுக்குள் வானம் )

*ஆசிரியர் : ஆர்.பாலகிருஷ்ணன் ( Retd IAS )*

கடந்த மாதம் வாசிப்பில் ஆர்வம் உடைய இன்னொரு நண்பருடன் பேசிக்கொண்டு இருக்கும் பொழுதுதான் முதன் முதலாக எழுத்தாளர் மற்றும் ஒய்வு பெற்ற ஆட்சியர் ஆர்.பாலகிருஷ்ணன் அவர்களை பற்றிய அறிமுகம் கிடைத்தது.

புத்தகத்தை பற்றி எழுதும் முன் ஆசிரியரை பற்றிய ஒரு சிறிய அறிமுகம். இவர் திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்த நத்தம் என்ற ஊரை சேர்ந்தவர். ஐ.ஏ.ஸ் தேர்வில் தமிழ் வழியில் வெற்றி பெற்ற முதல் மாணவர். சிறு வயது முதலே தமிழ் மீது தீராத பற்று கொண்ட இவர், பள்ளி, கல்லூரி வயதினிலே பல பேச்சு போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகளை வென்றுள்ளார். கல்லூரி படிப்பை முடித்து விட்டு தினமணியில் வேலை பார்த்துக் கொண்டே ஐ.ஏ.ஸ் தேர்வுக்கு படித்து அதில் முதல் முயற்சியிலே வெற்றியும் பெற்று ஆட்சியாளர் ஆகியுள்ளார். ஒடிஷா மாநிலத்தில் பல பொறுப்புகளை வகித்துள்ள இவர் தேர்தல் ஆணையத்திலும் பணியாற்றி நேர்மைக்கும் கடமைக்கும் இலக்கணமாய் திகழ்கிறார். இது போக சிந்துசமவெளி நாகரிகம் பற்றி ஆராய்ச்சி செய்து பல ஆய்வுக் கட்டுரைகளும் வெளியிட்டுள்ளார்.

முகநூலை நோண்டிகிட்டு கால்போன போக்கில் செல்லும் நமக்கே ஆயிரம் அனுபவங்கள் இருக்கும் போது, வாழ்க்கையில் பல கஷ்டங்களை கடந்து வெற்றி பெற்று அந்த வெற்றியை தக்க வைத்து கொள்பவர்களுக்கு எவ்வளவு சிறப்பான அனுபவங்கள் இருக்கும். சிறகுக்குள் வானம், இது ஆர். பாலகிருஷ்ணன் அவர்கள் தன்னுடைய வாழ்க்கை அனுபவங்களை கோர்த்து வெளியிட்டுள்ள ஒரு கட்டுரை தொகுப்பு.

இந்த புத்தகத்தின் வழியே தன்னை ஏணியில் ஏற்றி விட்ட உன்னத மனிதர்களையும், தன் தனிப்பட்ட வாழ்விலும், அலுவலகத்திலும் தனக்கு ஏற்பட்ட மறக்க முடியாத அனுபவங்களையும் நம்முடன் பகிர்ந்து கொண்டுள்ளார் ஆசிரியர். இவர் தமிழ் இலக்கியம் பயின்றவர் என்பது அவருடைய எழுத்திலும், ஒவ்வொரு கட்டுரை முடிவிலும் அந்த கட்டுரையை இரத்தின சுருக்கமாய் கவிதையாய் கொடுத்திருப்பதிலும் தெரிகிறது.

வாசித்ததில் மிகவும் பிடித்த கட்டுரை. ஆசிரியருக்கு பதினான்கு வயது ஆகும்போது தமிழகத்தில் ஒரு இடைத்தேர்தல் வருகிறது, அதற்கான பிரச்சாரத்தில் இவருக்கு காமராஜர் முன் உரையாற்ற ஒரு வாய்ப்பு கிடைக்கிறது. ஆசிரியர் சிறு வயதிலே நல்ல பேச்சாளர், அதனால் காமராஜர் ஆட்சியின் சிறப்பு பற்றி ஒரு உரை ஆற்றுகிறார். மக்களின் கைத்தட்டு விண்ணைப்பிளக்கிறது. ஆனால் காமராஜர் அதை கண்டுகொள்ளவே இல்லை. ஆர்.பாலகிருஷ்ணன் அவர்களை அழைத்து விசாரித்த காமராஜர் அவருடைய காரிலேயே ஊருக்கு அழைத்து செல்கிறார். ஆசிரியருக்கு காமராஜர் தன்னை பாராட்டுவார் என்ற எண்ணம். ஆனால் காமராஜர் இப்படி சொல்கிறார். "உன்னைப் போன்ற பள்ளி மாணவர்களை சரியாக வழி நடத்தவில்லையோ என்று கவலையாக இருக்கிறது" பொது வாழ்க்கையில் ஈடுபாடு இருக்கலாம் ஆனால் படிப்பு வீணாக கூடாது. இப்போதென்ன தேர்தல் தானே நடக்கிறது, சுதந்திர போராட்டமா நடக்கிறது என்ற காமராஜர், நன்றாகப் படி, கலெக்டராகி மக்களுக்கு நல்லது செய் என்று சொல்லி விட்டு செல்கிறார். ஒரு விதையை விதைத்து விட்டு செல்கிறார் ஒரு தலைவர்.

படித்தது : http://bookday.co.in/tag/balakrishnan-ias/

ஆசிரியரின் இரண்டு புத்தகங்களின் PDF-ஐ தரவிறக்கம் செய்து கொள்ளலாம்

தமிழா இணைவோம்!! தமிழால் இணைவோம்!!

# WITS செய்தி மடல்

# தமிழ் ஊற்று

## தொடர்ச்சி....

### ரசித்த கவிதை வரிகளில் சில:

ஈர்ப்பு விசை மீறி
எழத் தெரிந்த சிறகுக்கே
வானம் வசப்படும்
உலகில் பாதியை
ஊதியமாய் கொடுத்தாலும்
விருப்பமில்லாத வேலையில்
வெறுப்புதான் மிஞ்சும்
துருபிடித்துப் போகிற
துயரத்தை விடவும்
தேய்மானம் கௌரவமானது
ஒரு வகையில்
வெற்றியின் அருமையை
விளங்கிக் கொள்வதற்கு
தோல்வியின் துணை
கொஞ்சம் தேவைப்படுகிறது
உயர்வு என்பது
உண்மையில்
"உயரம் சம்பந்தப்பட்டதல்ல
உன்னதம் சம்பந்தப்பட்டது"
அறியாதவை குறித்த
அச்சத்தால்
நாம்
தீண்டத்தவறும்
திசைகள் கோடி
இனமாகக் கிடைக்கிற
எல்லாவற்றிக்கும்
எங்கோ ஒரு இடத்தில
ஏதோ ஒரு வகையில்
ஒளிந்திருக்கிறது
ஒரு விலை

American Red Cross

GIVE BLOOD

TWO Madison Locations with lots of times to choose from!

**Madison East**
2109 Zeier Rd.
Sundays 7:30-3:45
Mondays 8:00-4:15
Tuesdays 11:15-7:30
Wednesdays 11:15-7:30
Thursdays 9:45-6:00
Fridays 7:30-3:45
Saturdays 7:30-3:45

**Madison West**
4860 Sheboygan Ave.
Sundays 7:30-3:45
Mondays 10:45-7:00
Tuesdays 10:45-7:00
Wednesdays 10:45-7:00
Thursdays 8:45-5:00
Fridays 7:30-3:45
Saturdays 7:30-3:45

Warm hearts, great gifts! As our thanks for coming to give Feb. 1-28, we'll send you a $10 Amazon.com Gift Card via email, thanks to our partners at Amazon! Terms apply. Visit rcblood.org/together.

For an appointment, please visit redcrossblood.org
Or call 1-800-RED CROSS (1-800-733-2767).

Give Something that Means Something

1-800-RED CROSS | RedCrossBlood.org | Download the Blood Donor App

## MEMBERSHIP BENEFITS

**President's Volunteer service Award**
**Free virtual Yoga session**
**Participate in WITS public events**
**WITS event tickets discount**
**WITS Member only events**
**WITS Member free goodies**
**Dance school fees discount**
**Tamil school fees discount**
**Indian grocery stores discount**
**Indian restaurants discount**
**Math & English school fees discount**
**Music school fees discount**
**Sangamam event tickets discount**

தமிழா இணைவோம்!! தமிழால் இணைவோம்!!

# WITS
# செய்தி மடல்
# தமிழ் ஊற்று

## வாழ்த்துச் சொல்ல வருகிறோம்



**பிரபாகரன் சுந்தர்**
**சுந்தர் சர்மிளா**
**Feb:19**
25வது திருமண விழா




**ரவிசங்கர் பிருந்தா**
**Jan:23**
திருமண நாள்



**கியான் ரவிசங்கர்**
**Jan:28**
பிறந்தநாள் வாழ்த்துக்கள்



**சஷ்டிகா குரு**
**Jan:21**
பிறந்தநாள் வாழ்த்துக்கள்



**சக்திவேல் பிரபாகரன்**
**Jan:23**
பிறந்தநாள் வாழ்த்துக்கள்



**மணிவண்ணன்**
**Jan:10**
பிறந்தநாள் வாழ்த்துக்கள்

தமிழா இணைவோம்!! தமிழால் இணைவோம்!!

# WITS செய்தி மடல்

# தமிழ் ஊற்று







## ஓவியம்



சஷ்டிகா குரு



ரெய்னா ரத்னம்

தமிழா இணைவோம்!! தமிழால் இணைவோம்!!

# WITS செய்தி மடல்

# தமிழ் ஊற்று










# புதிர் பக்கம்




## Across

இடமிருந்து வலம்

1.விஸ்கான்சின் தமிழ்ச்சங்கத்தின் செய்தி மடல்

3.பொங்கள் நாட்களில் விரும்பியுண்ணும் பயிர்களில் ஒன்று

4.கடையேழு வள்ளல்களில் ஒருவர்

8.தமிழ் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்று

7.தம்பிக்காக தன் தலை எடுக்க வாளைக் கொடுத்த வள்ளல்

11.ஒரு வித ஆற்றல்

## Down

மேலிருந்து கீழ்

1.யாமறிந்த மொழிகளிலே__________போல் இனிதாவ தெங்குங் காணோம்

2.தென்னிந்திய மலைகளில் அரசி

5.மாம்பலம் (தி.நகர்) அடுத்து வருவது -

6.சிங்காரச்__________

9.பொள்ளாச்சியில் திரும்பிய பக்கமெல்லாம் இவன் தெரிவான்

10.ஜல்லிக்கட்டு – இப்படியும் சொல்லலாம்.

தமிழா இணைவோம்!! தமிழால் இணைவோம்!!

# WITS செய்தி மடல்

# தமிழ் ஊற்று

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| [2]த | மி | ழ் | [2]ஊ | ற் | று | | | | [9]தெ |
| மி | | | ட் | | | [7]கு | [10]ம | ண | ன் |
| ழ் | | | டி | | | | ஞ் | | னை |
| [3]மொ | ச் | [5]சை | | | | | சு | | |
| ழி | | தா | | | | | [11]வி | சை | |
| | | ப் | | செ | | | ர | | |
| | | [4]பே | க | ன் | | | ட் | | |
| | | ட் | | னை | | [8]ச | டு | கு | டு |
| | | டை | | | | | | | |

## புதிர் பக்கத்தின் விடைகள்

உங்கள் சாதனைகள்

கவிதைகள்

உற்றார் பிறந்தநாள்

வண்ண ஓவியங்கள்

திருமணநாள் வாழ்த்து

புதிர்பக்கங்கள்

நமது வட்டாரச் செய்திகள்

சமையல் குறிப்புகள்

சிறுகதைகள்

பாட்டி வைத்தியங்கள்

அழகு குறிப்புகள்

உங்கள் தொழில் விளம்பரங்கள்

உங்கள் குழந்தைகளின் படைப்புகள்

உங்கள் பதிவுகள் எங்கள் செய்திமடலில் இடம்பெற, நமது செய்திமடல் பற்றிய உங்கள் கருத்துக்களை பகிர்ந்திட இன்றே இணைந்திடுங்கள் மின்னல் வேகத்தில் மின்னஞ்சல் மூலம்.

அனுப்ப வேண்டிய முகவரி: wisconsintamilsangam@gmail.com

நமது செய்திமடலுக்கு "தமிழ் ஊற்று" என்ற அழகு பெயர் சூட்டிய திரு.கார்னிலியஸ் சுகுமார் அவர்களுக்கு நமது நன்றி.